ஜனவரி 2011 மலர் 4 இதழ் 1

# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

# India ECHOES 2011

ONE WORLD ONE HUMANITY

## மகிழ்ச்சியான புத்தாண்டு



2010ம் வருடம் நிறைவடைந்த சமயத்தில், மாஸ்டருடன் இருப்பதற்காக, அப்யாசிகள், பெருமளவில் மணப்பாக்கத்திற்கு வந்திருந்தனர். நம்மிடம் இருப்பவற்றை ஆராயவும், முடிவற்ற சந்தர்ப்பங்களைக் கொண்ட நாட்கள், நாம் என்னவாக மாறவேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ, அம்மாதிரி மாற ஒரு வாய்ப்பு ஆகியவற்றுடன் கூடிய புது வருடத்தை எதிர்நோக்கத் தயாராகவும் இருந்த ஒரு தருணமாக அது இருந்தது. ஆசிரமம், விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேலும், ஒருவருக்கொருவர் சந்தித்துக்கொள்ளவும், வாழ்த்துக்கூறவும், அப்யாசிகளுக்கு வாய்ப்பு கிட்டியது.

மாஸ்டர், சீக்கிரமாகவே எழுந்து தயாராகி, வாழ்த்துக்கூற வந்த அப்யாசிகளைச் சந்தித்துக் கொண்டிருந்தார். 2011 ஜனவரி முதல் தேதி, காலை சத்சங்கத்தில், 7000 க்கும் மேற்பட்ட அப்யாசிகள் கலந்து கொண்டனர். சகோ. பி. ஆர். கிருஷ்ணா, ஒரு சிற்றுரையாற்றினார். அதன்பின் மாஸ்டர், சகோ. குமரேஷ் மற்றும் சகோதரி ஜெயந்தி ஆகிய பாடகர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

## தீபாவளி கொண்டாட்டங்கள்

மாஸ்டருடன் மணப்பாக்கத்தில் தீபாவளியை கொண்டாடும் பொருட்டு, சுமார் 1000 அப்யாசிகள் ஆசிரமத்தில் குழுமினர். தீபாவளித்திருநாளை யாவரும் மகிழ்ச்சியாகவும், உற்சாகத்துடனும் கொண்டாடினர். காலை, மாஸ்டர் சத்சங்கம் நடத்தி, அப்யாசிகளின் உள்ளங்களில் மிகுந்த அன்புடன் ஒளிவிளக்கேற்றினார். மாஸ்டரின் குடில் ரங்கோலி கோலங்களினாலும், ஒளிவிளக்குகளினாலும் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மணப்பாக்கம் ஆசிரமத்தில், நவ. 10 தேதியன்று, மாஸ்டர் 15 திருமணங்கள் நடத்திவைத்தார். மிகுந்த உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் காணப்பட்ட அவர், சில மணமக்களை நோக்கி "இந்த ஆன்மீக திருமண பந்தத்திலிருந்து என்றென்றும் பிரியாதிருப்பீர்களாக" என அறிவுரை வழங்கினார்.



## ஹைதராபாத்- நவ.11ம் தேதியிலிருந்து 18ம் தேதி வரை

மாஸ்டர், 11ம்தேதிகாலை, ஹைதராபாத் பன்னாட்டு விமான நிலையத்தில் வந்து இறங்கியவுடன், சுமார் 20 கி.மீ. தொலைவிலுள்ள "கன்ஹாசாந்தி" வன திட்டத்திற்கு புறப்பட்டுச்சென்றார். அவர் களைப்புற்று காணப்பட்ட போதிலும், ஒரு மரத்தின் கீழேயும், சுற்றியும் அமைக்கப்பெற்ற அழகான சிறு குடிலைப்பார்த்து களிப்புற்றார். ஒரு அப்யாசி அதைப்பார்த்து பாராட்டிய போது, மாஸ்டர், "நாம் இப்பொழுது ராமரை தொட்டிலில்தான் பார்க்கிறோம்: இதற்குப் பிறகு மகத்தான வேலைகள் காத்துக்கொண்டிருக்கின்றன என குறிப்பிட்டார். அவர் தன் கல்லூரி நண்பரான திரு. டி. எ ஸ். ராவ் உடன் மதிய உணவு அருந்தினார். மாஸ்டரும் திரு. ராவும், பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகத்தில் கழித்த தங்கள் பழைய நாட்களை நினைவு கூர்ந்து அளவளாவிக்கொண்டிருந்தனர். அதை கண்ணுறும்போது ஆனந்தமாக இருந்தது. மாஸ்டர், இரவு தங்குவதற்காக ஒரு அப்யாசியின் வீட்டிற்கு புறப்பட்டு சென்றார்.

அடுத்த நாள் மாஸ்டர், தூம்குண்டா மையத்திற்குச் சென்றார். அங்குள்ள அப்யாசிகளும், குழந்தைகளும், ஒழுங்காக நின்று அவரை வரவேற்றனர். மாலை 5மணிக்கு, மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். இதில் ஆந்திராவின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த, சுமார் 5000 அப்யாசிகள் கலந்து கொண்டனர்.

சனிக்கிழமை, மாஸ்டர் அதிகாலையிலேயே எழுந்து, சிறிது நேரம் ஊஞ்சலில் வந்தமர்ந்தார். ஏற்கனவே அங்கு வந்திருந்த அப்யாசிகள் அவரைக்கண்ணுற்று மிக மகிழ்ச்சி அடைந்தனர். அவர் தியானக்கூடத்திற்கு செல்லும்பொழுது, ஒரு பெண் அவரைப்பார்த்து "இந்நாள் தங்களுக்கு இனியதாக அமையட்டும்" என கூறினாள். அதற்கு அவர் ," இல்லை, இந்நாளை உங்களுக்கு இனிதாக்கவே நான் வந்திருக்கிறேன்" எனக்கூறினார். 9 மணி சத்சங்கத்திற்கு பின், மாஸ்டர், அப்யாசிகளின் ஆன்மீக நலத்தைப்பற்றி வினவினார். ஆன்மீக நலனை நன்கு பேண ஆவன செய்யுமாறு அறிவுறுத்தினார்.

ஞாயிறு காலை, மாஸ்டர் நடத்திய சத்சங்கத்தில், சுமார் 5500 அப்யாசிகள் கலந்து கொண்டனர். தியானக்கூடத்தை விட்டு வெளியே வந்த பொழுது, மாஸ்டர், சில நாட்களாகவே உடல்நலம் சரியாக இல்லாதிருந்த ஒரு வயதான அப்யாசியிடம், அவர் நலத்தை பற்றி விசாரித்தார். அவரின் அன்பும் பரிவும் மிக்க இந்த செய்கை, எல்லோர் மனதையும் தொட்டது. நமக்கு வயதாக ஆக, சுய கட்டுப்பாட்டையும், ஒழுங்கு முறையையும் கைக்கொள்ளவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினார்.

அநேக தாய்மார்களும், தாயாகப் போகிறவர்களும் மாஸ்டரின் ஆசீர்வாதத்தைப் பெற வரிசையாக வந்தனர். அவர்களில்





ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

எக்கோஸ் இந்தியா செய்திமடல்





ஒருவரிடம், "நல்ல ஆரோக்கியமான சகஜ மார்க்க குழந்தையை இந்த உலகத்திற்கு கொண்டு வாருங்கள். குழந்தையைக் கொண்டு வந்தபிறகு, அதை உங்களுடையதாக உரிமை கொண்டாடாதீர்கள். அது சகஜ மார்க்கத்தைச் சேர்ந்தது

என்பதை நினைவில் கொள்ளுங்கள்" என்று மாஸ்டர் கூறினார்.

குழந்தைகள் தினத்தன்று, மாஸ்டரை வாழ்த்த, காலையிலிருந்து அமைதியாக சிறந்த ஒழுக்கத்துடன் காத்துக் கொண்டிருந்த குழந்தைகளுடன், மாஸ்டர் சிறிதுநேரம் இருந்தார். அவர் அவர்களிடம், "நீங்கள் எப்பொழுதுமே சகஜ மார்க்க குழந்தைகள் என்பதை நினைவு கொள்ளுங்கள். அனைவரையும் நேசியுங்கள். அன்புடன் வளருங்கள். பெரியோர்களுக்கும், பெற்றோர்களுக்கும் கீழ்படிந்து நடந்து கொள்ளுங்கள். பாபூஜி மகராஜின் ஆசீர்வாதங்கள் உங்கள் அனைவருக்கும் உள்ளது" என்று கூறினார்.

நவம்பர் 15, திங்கட்கிழமை, ஒரு அப்யாசியின் அலுவலகத்தின் புதிய வளாகத்தில், மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். பின் அவர் தோமல்குடா ஆசிரமத்திற்குச் சென்றார். ஆசிரமத்தின் உள்ளே நுழைந்தபோது, மே 1967 ம் ஆண்டு தோமல்குடா ஆசிரமத்தை பாபூஜி மகராஜ் திறந்துவைக்கும் புகைப்படத்தை சிறிது நேரம் பார்த்துவிட்டுச் சென்றார். பின்பு அவர் சுமார் 500க்கும் மேற்பட்ட அப்யாசிகளுக்குச் சத்சங்கம் நடத்தினார்.

நகரத்தின் வடபகுதியில் இருக்கும் மண்டல ஆசிரமத்திற்கும், தென்பகுதியில் உள்ள கன்ஹாதிட்டத்தின் இடத்திற்கும் மாஸ்டர் வருங்காலத்தில் வருகை புரியும்போது, தோமல்குடா ஒரு தங்கிச் செல்லும் இடமாகச் செயல்படலாம். மண்டல ஆசிரமத்தை, உத்தரகைலாஷ் என்றும், கன்ஹா, தக்ஷின் கைலாஷ் என்றும், தோமல்குடா, மத்தியகைலாஷ் என்றும் மாஸ்டர் வேடிக்கையாக குறிப்பிட்டார்.

அவர், கன்ஹா திட்டத்தில் பணி புரியும் குழுவினைச் சந்தித்து, சில திட்டங்களைப் பரிசீலனை செய்தார். முதன்முதலாக அவர் பார்த்த திட்டமே தான் யோசித்தபடியே இருந்ததால் மிக்க மகிழ்ச்சியடைந்தார். "மிக உயர்ந்த குறிக்கோளுக்குப் பொருந்தும்படி இயற்கை எவ்வாறு தன்னையே ஒழுங்கமைத்துக் கொள்கிறது பார்த்தீர்களா?" என்று கூறினார். பின்பு மாஸ்டர், மாலை 4 மணிக்குப் புறப்பட்டு, தும்குண்டா ஆசிரமம் வந்து சேர்ந்தார்.

16ந் தேதி பிற்பகல், வானிலை மேகமூட்டமாகி, மெல்லிய தூறலும் இருந்தது. மாஸ்டர் ஊஞ்சலில் அமர்ந்து, உணவகத்தில் என்ன தயாரித்துக் கொண்டிருக்கின்றனர் என்று விசாரித்தார். ஒருவர் கொண்டுவந்த சில சூடான சிற்றுண்டிகளை சுவைத்துவிட்டு, வெளியில், கதவிற்கு அப்பால் தூறலில் நின்று கொண்டிருந்த அப்யாசிகளுக்கு வழங்குமாறு கூறினார்.

மாலையில், இந்திய ஆகாயப்படையில் பணிபுரியும் அப்யாசிகள் குழுவினர், மாஸ்டரை சந்திக்க வந்தனர். அவர்களைக் கண்ட மாஸ்டர், மிக்க மகிழ்ச்சி அடைந்தார். அவர், "வானத்திலேயே பறந்து கொண்டிருப்பவர்கள், கீழே அமர்ந்து கொள்ளமுடியுமா?" என்று சிரிப்புடன் கூறினார். பின்பு காட்டேஜ் உள்ளே அவர்களுக்கு ஒரு சிட்டிங் வழங்கினார்.

17ம் தேதி, பக்ரீத் விடுமுறையானதால், அப்யாசிகளின் எண்ணிக்கை மிக அதிகமானது. மாஸ்டர் 9 மணிக்கு சத்சங்கம் நடத்தினார். பின்பு, ஹைதராபாத்திலிருந்து வந்திருந்த ஒரு ஜோடிக்கு நிச்சயதார்த்தத்தை நடத்தினார். 'போகவிடுதல்' என்ற மனப்பாங்கை நம் பயிற்சியில் கடைப்பிடிக்கவேண்டியதைக் கோடிட்டுக்காட்டி, சகோ. சக்ரபாணி, ஒரு அற்புதமான உரையை நிகழ்த்தினார். பொறுப்புள்ள மனப்பாங்கைக் கொள்ளவேண்டியதன் அவசியத்தை அவர் விவரித்தார்.

மாலை சத்சங்கத்திற்குப்பின்னர், சகோ. சௌம்யா மற்றும் குழந்தைகள் மையத்தைச் சேர்ந்த 5 இளம் குழந்தைகள் கொண்ட குழுவின் பரத நாட்டியக்கச்சேரி நடைபெற்றது. மாஸ்டர் தன் காட்டேஜில் இருந்து அதனைப் பார்த்தார்.

18ந் தேதி, மாஸ்டர், பலபேர்களை சந்தித்தல், சிட்டிங்குகள் கொடுத்தல் மற்றும் கணினியில் வேலை பார்த்தல் என்று மிகவும் சுறுசுறுப்பாக இருந்தார். தலைவலி இருந்தும்கூட, மனோசக்தியினால் மட்டுமே அவர் பணிபுரிவதைக் காணமுடிந்தது. பிற்பகல் 2.30 மணிக்கு அவர் சென்னைக்குப் புறப்பட்டார்.

## ஆசிய செயலரங்கு

சைனா, ஹாங்காங், இந்தோனேஷியா, ஜப்பான், கொரியா, மக்காவ், நேபால், பிலிப்பைன்ஸ், ஸ்ரீலங்கா, தாய்வான், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய இடங்களிருந்து, சுமார் 250 பேர் பங்கேற்ற ஆசிய செயலரங்கு, நவம்பர் 29முதல் டிசம்பர் 3 வரை நடைபெற்றது. சகோ. பி.ஆர். கிருஷ்ணா, சகோ. சக்ரபாணி, சகோதரி ஸ்ரீமதி ராதோட் மற்றும் சகோ. என்.பிரகாஷ் ஆகியோர் உரையாற்றினர். நவம்பர் 28~ந்தேதி, சத்சங்கத்திற்குப் பிறகு, மலேசியாவில் முதல் ஆசிரமம் (இந்தியாவிற்கு வெளியே) நிறுவ இருப்பதை, மாஸ்டர் அறிவித்தார்.

தன்னுடைய துவக்க உரையில், பண்பு உருவாக்கம் பற்றிப் பேசிய அவர், "உங்களுக்குள் இருக்கும் எதையும் மாற்றி, உங்களை மிக உயர்ந்த, ஒளிமயமான, வண்ணமயமான, ஒத்திசைவுள்ள, அன்பு நிறைந்த இடத்திற்குக் கொண்டுவர, என்னால் முடியும் என்று பாபூஜி கூறுகிறார். வெளி உலகத்தை நிர்வகிப்பது உங்கள் பிரச்சனை. உங்களிடம் மனோ பலம் இருக்கிறது, மனித குலத்திற்கே உரித்தான புத்திசாலித்தனம் இருக்கிறது......அவர் சொல்வதை மட்டும் கேளுங்கள், நீங்கள் எதைப் பார்த்தாலும்,







அவரை மட்டும் பாருங்கள்; அவர், உங்களை செய்யச் சொல்வதை மட்டும் செய்யுங்கள்; அவரைக் காண்பதை ஒரு போதும் விட்டு விடாதீர்கள். அவரைப் பின் பற்றுங்கள். உங்களை அறியாமலேயே, ஒரு தாயின் கையில் இருக்கும் குழந்தை போல, அவள் அங்கு சேரும்போது, நீங்களும் அங்கு இருப்பீர்கள்," என்று கூறினார்.

மாஸ்டர், அப்யாசிகளுடன் சிறிது நேரம் செலவிட்டார். முதல் நாள், தன்னைச் சந்திக்க வருமாறு புது அப்யாசிகளை அழைத்தார். சீன அப்யாசிகளின் அனைத்துக் கேள்விகளுக்கும், மாஸ்டர் பொறுமையுடன் பதிலளித்தார். ஒரு மொழிபெயர்ப்பாளரும் இருந்தார். சிறிது நேரத்திற்குப்பின், மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்ப்பை முடிக்கும் முன்பே, மாஸ்டர் பதிலளித்து விடுவார். வியத்தகும் வகையில், சீனமொழி மட்டுமே அறிந்த, ஆங்கிலமே தெரியாத அப்யாசிகள், புரிந்துகொண்ட விதத்தில் தலையை அசைத்தனர்!

சீனாவில், மக்கள் சகஜ மார்க்கத்தை வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளாததால், அங்கு எவ்வாறு பயிற்சி செய்வது என்று ஒரு அப்யாசி மாஸ்டரைக் கேட்டார். மக்களைக் கவர, ஒருவர் சிறந்த முன்னுதாரணமாக இருக்கவேண்டும் என்றும், அதைப்பற்றிக் கவலைப்படவோ, பயப்படவோ தேவை இல்லை என்றும் மாஸ்டர் பதிலளித்தார்.

அவர் பல்வேறு நாடுகளின் 58 பிரிபெக்ட்களைச் சந்தித்து, பிரிபெக்ட் பணியைப் பற்றிய, எளிமையான, ஆனால் பொருத்தமான பல கேள்விகளுக்கு பதிலளித்தார். அவரது அலுவலக அறைக்கு ஒளிபரப்பப்பட்ட கலை நிகழ்ச்சிகளையும் பார்த்தார்.

மலேசியா மற்றும் சிங்கப்பூருக்கு பாபூஜியின் வருகை, மேலும், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான் மற்றும் சீனாவிற்கு மாஸ்டரின் வருகை ஆகியவற்றைப் பற்றிய ஒரு 20 நிமிட படம் ஒன்று காட்டப்பட்டது. ஒவ்வொரு மண்டலமும் இத்தகைய படம் வழங்க வேண்டும் என்று மாஸ்டர் விரும்பினார்.

மாஸ்டர், டிசம்பர் 3 அன்று சத்சங்கம் நடத்தியபின், தன் முடிவுரையை வழங்கினார். பிரெஞ்சு- சீன பரிமாற்ற நிகழ்ச்சி, மற்றும் ஒவ்வொரு மையமும் கடந்த வருடங்களில் தாங்கள் செய்து வந்ததை வழங்கியது போன்றவற்றிலிருந்து கவனித்துக் கற்றுக்கொள்ள நிறைய சந்தர்ப்பங்கள் இருந்தன. இந்த செயலரங்கில், பல புதிய கருத்துக்கள், இதயங்களில் நிறைந்த அன்பு ஆகியவற்றுடன், பங்கேற்ற ஒவ்வொருவரும், ஒரு புதுப்பிக்கப்பட்ட சக்தியையும் உணர்ந்தனர். அத்துடன், அவர்கள் தங்கள் நாடுகளில் மிஷனுக்கு மேலும் சேவை செய்ய இதயத்தில் உறுதி பூண்டனர்.

## வெள்ள அபாயம்

கன மழை காரணமாக, தாழ்ந்த பகுதியில் உள்ள மணப்பாக்கம் முகலிவாக்கம், மற்றும் கௌரிநகர் பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டது. அப்பகுதிகளிலும், சுற்றிலும் உள்ள சில அப்யாசிகளின் இல்லங்களில் நீர் புகுந்துவிட்டது. ஆசிரமத்தில் உள்ள அனைவரையும் காலி செய்யும்படியும், வெளியூர் அப்யாசிகள் தங்கள் மணப்பாக்கம் வருகைக்கான பயணத்தை ரத்து செய்துவிடும்படியும் மாஸ்டர் கூறினார். மழை நின்று, வெள்ள அபாயம் நீங்கும்வரை ஆசிரமம் மூடப்பட்டிருந்தது. நெருக்கடியான இக்காலகட்டம் முழுவதும், மாஸ்டரது அன்பும், அக்கறையும் கண்கூடாகத் தெரிந்தது.



## ஐரோப்பிய செயலரங்கு - 2010 டிசம்பர் 18 முதல் 23 வரை

பனிப்புயல் காரணமாக, பல ஐரோப்பிய விமான நிலையங்கள் மூடி இருந்தபோதிலும், 1200க்கும் மேற்பட்ட அப்யாசிகளால் மணப்பாக்கத்தை அடைய முடிந்தது.

தங்களைத் தாங்களே எதிர்கொள்ளத் தேவையான தைரியத்தைக் கண்டுகொண்டு, மனிதசமுதாயத்தில் எதிர்கால மாற்றத்தைக் கொண்டுவர என்ன செய்யலாம் என்ற எண்ணங்களைப் பிரதிபலிக்க, பங்கேற்றவர்களை மாஸ்டர் வரவேற்று, இச்செயலரங்கை ஆரம்பித்து வைத்தார். "மற்றவர்களுடன் உபயோகமற்ற பேச்சுக்களில் நேரத்தை வீணாகச் செலவு செய்யாமல், உண்மையிலேயே தீவிரமான நேரத்தை இந்த செயலரங்கின் மூலம் நீங்கள் பெறவேண்டும். தனியாக அமர்ந்து, சுயஆய்வு செய்து, உண்மையாக, ஆழமாக, தயாராக உங்கள் இதயம் தரும் பதில்களை ஏற்றுக்கொள்ள, அதனைப் பயன்படுத்துங்கள்."



மாஸ்டரின் வேண்டுகோளுக்கு செவிமடுக்கும் வண்ணம், நிகழ்ச்சியில் உடனடியாக மாற்றம் செய்யப்பட்டது. செயலரங்கின் மையச்செயல்பாடாக மௌனத்தைப் பிரதிபலிக்கும் தருணங்கள் பலவும், முன்மொழியப்பட்டன. இந்த மௌனம் பிரதிபலிக்கும் தருணங்கள், மற்றும், தினமும் 3 சத்சங்கங்கள் இவற்றுடன் கூடுதலாக, மாஸ்டர், தான் தேர்ந்தெடுத்த சில தலைப்புகளில் பேச, வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்தார். சகோ.பி. சக்ரபாணி - வாழ்க்கைக்கடல், சகோ.பி.ஆர். கிருஷ்ணா - மாஸ்டரும் நானும், சகோ. கே.எஸ். பாலசுப்ரமணியன் - குருவும் சீடரும் மற்றும் சகோ. கமலேஷ் பட்டேல் - உண்மையான பயிற்சி.



அவர், நிகழ்ச்சிகளுக்கு நேரடியாக வருகை தராவிட்டாலும், தன் அலுவலகத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்ட எல்லா சொற்பொழிவுகளையும் கேட்டார். இச்செயலரங்கில், பல கூட்டங்களிலும், தன் காட்டேஜில் கூடிய சாதாரண கூட்டங்களிலும், மாஸ்டர் தன் மகிழ்ச்சியை தெரிவித்தவண்ணம் இருந்தார். வழக்கமாகத் தடைசெய்யப்படும் இல்லற வாழ்க்கை, பாலியல் சம்பந்தப்பட்ட விஷயங்கள்பற்றி கூட, சவால் விடும் தீரத்துடன், தன் ஒப்பில்லாத முறையால் பல்வேறு தீவிரமான தலைப்புக்களில் உரைநிகழ்த்தினார்.




தற்சமயம் பெர்லின் ஆசிரமம் உள்ள வளாகத்திலேயே, ஐரோப்பாவின் முதல் க்ரெஸ்ட் உருவாகின்றதை அறிவித்தார். மேலும், 2011 வசந்தகாலத்தில், "மனிதன் என்பவன் யார்? அல்லது என்ன?" என்ற கருத்தில், ஒரு முதல் செயலரங்கை இளைய, வயது வந்த அப்யாசிகளுக்காக ஏற்பாடு செய்யவும் முன்மொழிந்தார். டென்மார்க், வ்ராட் சன்டே ஆசிரமத்தின், தற்போதுள்ள இடத்திலேயே வரப்போகும், ஐரோப்பாவின் முதல் ரிட்ரீட் மையம் பற்றியும் அறிவித்தார்.

தனது முடிவுரையில், "வாழ்க்கையின் சந்தோஷத்தை" (joie de vivre என்று பிரெஞ்சு மொழியில் கூறுவதுபோல்) தமக்குள்ளேயே உருவாக்கிக்கொள்ள, பங்கேற்றவர்களை வரவேற்று, அவர்கள் வீடு திரும்பும் வழியில் இதே மனநிலையில் இருக்கவும், ஐரோப்பா, இப்போது இந்தியாவின் ஒருபகுதி என்ற உணர்வு இருக்கும்படியும் செய்தார்.

ஜனவரி 2011 மலர் 4 இதழ் 1
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# புதியவெளியீடுகள்




மெசேஜஸ் யுனிவர்சல் (கெட்டி அட்டை)




மெசேஜஸ் யுனிவர்சல்




இதயவாக்கு 2005 தமிழ்



ஹார்ட் ஸ்பீக் 2006 தெலுங்கு




அவேக்கன் அவர் கான்ஷியன்ஸ்
DVD ஆங்கிலம்




எ செலிபிரேஷன் - தி ஹார்ட்ஸ் எக்ஸ்பிரஷன் ஆப் இட்ஸ் கிராடிடியுட்
DVD ஆங்கிலம்




எ செலிபிரேஷன் -- தி ஹார்ட்ஸ் எக்ஸ்பிரஷன் ஆப் இட்ஸ் கிராடிடியுட்
DVD ஆங்கிலம்

அனைத்து ஒலி/ஒளி தகடுகளிலும் ஆங்கிலம், ப்ரெஞ்சு, ஸ்பானிஷ், ஜெர்மன், இத்தாலி, ரஷ்யன், தமிழ், தெலுங்கு, இந்தி, மற்றும் கன்னட மொழிகளில் துணை உரைகள் உள்ளன.

# அறிவிப்புகள்

## கிரெஸ்ட், பெர்லின்

ஜெர்மனி நாட்டில், பெர்லினில் உள்ள சகஜ மார்க்க ஆன்மீக ஸ்தாபனத்திற்குச் சொந்தமான இடத்திற்கு, ஐரோப்பாவின் ஆராய்ச்சி, கல்வி மற்றும் பயிற்சி மையம் (கிரெஸ்ட்) என்று மாஸ்டர் பெயர் சூட்டினார். சகோதரர் கிரிஸ்டின் மேகேடான்ஷ் என்பவரை, இம்மையத்தின் இயக்குனராக நியமனம் செய்தார்.

## சத்கோல் விண்ணபப்பங்கள்

வசந்த காலம் 2011 குழுக்கள்
ஜனவரி முதல் மார்ச் 2011 வரையிலான, வசந்த கால குழுக்களுக்கான விண்ணப்பங்கள், பின் குறிப்பிட்ட இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளன. http://www.sahajmarg.org/smww/satkhol/application-guidelines
விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்கு முன்பாக, வழிகாட்டு நெறிமுறைளை கவனமாக படிக்கவும். மின் அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ள இயலாதவர்கள், தயவு செய்து உங்கள் பிரெசெப்டர், மையப்பொறுப்பாளர் அல்லது மண்டலப் பொறுப்பாளரின் உதவியை நாடுங்கள். ஏதாவது சந்தேகங்கள் இருந்தால், சத்கோல் நிர்வாக அலுவலகத்தினை 044 22521099 அல்லது 044 42171111 extn 218 என்ற எண்களில் தொடர்பு கொள்ளுங்கள்.

# கடந்த காலத்தைப் பற்றிய ஒரு பார்வை



## பாபூஜியின் 85 வது பிறந்தநாள் விழா-- சென்னை 1984

பாபூஜி மஹராஜ் அவர்களின் மகாசமாதிக்குப்பின் நடந்த, முதல், மிகப்பெரிய விழாவான அவருடைய பிறந்த நாள் விழாவில், 3500 க்கும் மேற்பட்ட அப்யாசிகள், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வந்து கலந்து கொண்டனர். சென்னை வட பழனியில் உள்ள விஜயா சேஷமஹாலில், இவ்விழா நடைபெற்றது. விழா நடைபெற்ற இடத்தின் அருகாமையில் உள்ள திருமண மண்டபங்களில், அப்யாசிகள் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. தினமும் அப்யாசிகளை அழைத்து வரவும், திரும்ப கொண்டு செல்லவும், போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டு இருந்தன. விழாவானது, ஏப்ரல் 29 ம் தேதி ஆரம்பித்து, மே 1 ம் தேதி முடிவடைந்தது. ஒவ்வொரு நாளும் மாஸ்டர், காலையிலும் மாலையிலும் சத்சங்கம் நடத்தினார். விழாவின் அனைத்து எற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொன்டு, அவற்றை நேரில் கவனித்தார். அவரது மனைவி சகோதரி சுலோசனா, அவருக்கு உற்சாகத்தினை அளித்து உதவிகரமாக இருந்தார். அவருடைய அருளால், ஆனந்தமான, மகிழ்வான, அன்பு மற்றும் சகோதரத்துவம் கூடிய சூழல் எங்கும் பரவி இருந்தது. மாஸ்டரின் தந்தை திரு. சி.ஏ.ராஜகோபாலாச்சாரியும் முழு விழாவிலும் கலந்துகொண்டார். பாபூஜியின் செய்திகள் அடங்கிய ஒரு சிறிய புத்தகம் வெளியிடப்பட்டது. மாஸ்டர் "நம்முன் உள்ள கடினமானபணி" என்ற செய்தியினை அளித்தார். அதில், பாபூஜி நமக்காக கொண்ட கனவினையும், அவர் நம் முன்பாக வைத்த இலக்கினை அடைவது மூலமாக, அவருடைய கனவினை நனவாக்க நாம் செய்ய வேண்டிய கடும் பணியினையும், நமக்கு அவர் நினைவுபடுத்தினார். மிஷனின் வரலாற்றிலேயே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த செய்தியில் அவர், "அவரது விருப்பம்" இதில் இருப்பதால் நிச்சயம் இந்த இலக்கு அடையப்பட்டுவிடும் என்பதனை நினைவுபடுத்தினார். கட்டாயம் நிகழக்கூடிய மாற்றமானது, நம் இதயத்தில் நம்பிக்கையினை பிரதிபலிக்கும். மேலும், நாம் என்னவாக மாற்றம் பெற வேண்டும் என அவர் விரும்பினாரோ அதுவாக மாற நமக்கு உறுதியினையும் அளிக்கும். வழிவழியாக வரக்கூடிய ஆன்மீகமானது, வரக்கூடிய ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளில் மனித சமுதாயத்திற்கான தேவைக்குரிய சேவையினைச் செய்யும் பொறுப்பினை, நமக்கு அளித்துள்ளது. எனவே இது நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட புனிதமான பொறுப்பாகும். இதனை, உலகம் முழுவதும் உள்ள, ஆன்மீகத்தில் நாட்டம் உள்ள அனைவருக்கும், தலைமுறைக்குப்பின் தலைமுறையாக, அதன் தூய்மையான, கலப்படமற்ற வடிவத்திலேயே, கொண்டு செல்ல வேண்டும். இறுதியாக அவர், விழி, எழு, அவருக்கு மன நிறைவு எற்படும் வகையில் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அந்த தெய்வீகமான பணி, முழுமையடையும் வரை ஓய்வடையாதே என்ற, வீர முழக்கத்திற்கு செவி சாய்க்கும்படி வேண்டுகோள் விடுத்தார்.

("அண்டு ஹி மார்ச்சஸ் ஆன்" என்ற, 24 ஜுலை 2007 சிறப்பு நினைவு பதிப்பில் இருந்து இப் பகுதி எடுக்கப்பட்டுள்ளது)

# புதிய ஒளிமையங்கள்

## உடுமலைப்பேட்டை



உடுமலைப்பேட்டை மையம், ஏப்ரல்1990 ல் தொடங்கப்பட்டது. தற்போது இங்கு மூன்று பிரிபெக்ட்கள் மற்றும் 150 அப்யாசிகள் உள்ளனர். உடுமலைப்பேட்டை ஆசிரமம், ராஜாவூர் என்கிற மிகவும் கிராமிய சூழல்கொண்ட, அமைதியான இடத்தில் அமைந்துள்ளது. இதற்கு 'சாந்தி ஆசிரமம்' என மாஸ்டர் பெயரிட்டுள்ளார். இது நகரத்தின் மையப் பகுதியில் இருந்து 6 கி.மீ. தூரத்தில் இருக்கிறது.

ஒரு வருடத்திற்கு முன்பாக, மாஸ்டரின் அலுவலகம் திறக்கப்பட்டது. அச்சமயம், ஆசிரமத்திற்கான நிலம் பத்திரப்பதிவு செய்யப்பட்டது. ஐந்து ஏக்கர் நிலம், ஆசிரமத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எட்டு ஏக்கர் விவசாய நிலம், அப்யாசிகளுக்காக, வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

2010 டிசம்பர் 5 ம் தேதி, சகோதரர் என்.பிரகாஷ், முதல் சத்சங்கத்தினை நடத்திவைத்தார். சுமார் 75 அப்யாசிகள் கலந்து கொண்டனர். தியான மண்டபம் 60/40 அடியில் சுமார் 300 அப்யாசிகள் அமரத்தக்க வகையில் உள்ளது.

## திண்டுக்கல்



இம்மையம், 1991 ம் வருடம், மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில், ஒரு அப்யாசி சகோதரியின் வீட்டில், சத்சங்கம் நடத்தப்பட்டது. அப்யாசிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவும், சத்சங்கம் அமலாதேவி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. வத்தப்பாறையில் உள்ள ஆசிரமத்திற்கான நிலம், 2 வருடங்களுக்கு முன்பாக வாங்கப்பட்டது. இது நகரத்தில் இருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ளது. வத்தப்பாறையிலும் அதன் சுற்றுப்புறத்திலும், மல்லிகை மலர் தோட்டங்களும், தென்னந்தோப்புக்களும் நிறைந்துள்ளன. தமிழ்நாட்டில் உள்ள, அழகிய மலை வாசஸ்தலமான, கொடைக்கானல் செல்லும் வழியில், கொடைக்கானல் சாலையில், இந்த ஆசிரமம் அமைந்துள்ளது.

கடந்த 2 வருடங்களாக, புதிய தியான மண்டபம் கட்டப்படும் வரை, தற்காலிகமாக அமைக்கப்பட்ட குடில்களில், சத்சங்கம் நடைபெற்றது. தியான மண்டபம் 60/40 அடி பரப்பில் 300 அப்யாசிகள் அமரத்தக்க வகையில் உள்ளது. மாஸ்டர், புதிய தியான மண்டபத்தினை, 2010 டிசம்பர் 5 ம் தேதி முதல் பயன்படுத்த, அனுமதி வழங்கினார். சகோதரர் விச்வநாதராவ், முதல் சத்சங்கத்தினை நடத்திவைத்தார். சுமார் 50 அப்யாசிகள் கலந்து கொண்டனர். மற்றொரு சத்சங்கத்தினை, பிற்பகல் 1 மணிக்கு சகோதரர் பிரகாஷ் நடத்தினார். இது முதல் ஞாயிற்றுக்கிழமையாக இருந்ததினால், ஏனைய முதல் ஞாயிற்றுக்கிழமைகள் போன்று, ஒரு முழு நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அன்றைய தின தலைப்பாக, "இதயம் பேசுகிறது" என்ற தலைப்பில், அப்யாசி சகோதர சகோதரிகள், தலைப்பினை ஒட்டி தங்களது ஆன்மீக அனுபவங்களைப்பற்றிப் பேசினார்கள். இது மங்களகரமான தொடக்கமாகவும், நல்ல பயன் உள்ள முழு நேர நிகழ்ச்சியாகவும் இருந்தது.

## திருவண்ணாமலை - தமிழ்நாடு



சென்னையில் இருந்து 185 கி.மீ. தூரத்தில் உள்ள திருவண்ணாமலையில், புதிய மையம் ஒளிர்ந்தது. கண்ணமங்கலத்தில் இருந்து சென்று வந்த பிரெசெப்டர் சகோதரர் வேலு, 10 வருடங்களுக்கு முன்பாக இந்த மையத்தினைத் தோற்றுவித்தார். அன்றில் இருந்து இந்த மையம் மெதுவாக வளர்ச்சியடைந்து வந்தது. தியான மண்டபம் கட்ட, மாஸ்டரின் அனுமதி கிடைத்தபின்னர், மிகக் குறுகிய காலத்திலேயே, கட்டிட பணி முடிக்கப்பட்டது.

தியான மண்டபம் 14 நவம்பரில் திறக்கப்பட்டது. தமிழ்நாடு(வடக்கு) மண்டல பொறுப்பாளர் சகோ.எஸ்.பிரகாஷ் மற்றும் சுற்றுப்புறங்களில் இருந்து வந்த அப்யாசிகள், தியான மண்டப திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். தியான மண்டபத்திலிருந்து, மிக அமைதியும், நேர்மறையான சூழலும் கொண்ட, பிரம்மாண்டமான மலைகளைக் காணலாம். சகோ.சண்முகம், சகோ.பிரகாஷ், சகோ.லட்சுமிநாராயணன், சகோ.திருநாவுக்கரசு ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். சகோ.ஸ்ரீராமன் நிறைவு உரை நிகழ்த்தினார்.

## ஆசிரமம் கட்டுமானத்திட்டம் - குல்பர்கா

குல்பர்கா மையம், ஆசிரமம் மற்றும் குடியிருப்புக்கள் உருவாக்கும் திட்டத்திற்காக, 34 ஏக்கர் நிலம் வாங்கியுள்ளது. 16 நவம்பர் அன்று, மாஸ்டர், ஆசிரமம் மற்றும் குடியிருப்புக்களுக்கான வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கினார். கட்டப்படவுள்ள புதிய ஆசிரமத்திற்கு, பாபூஜி நினைவு ஆசிரமம், குல்பர்கா எனவும், குடியிருப்புக்களுக்கு "யோக ஜீவன் என்கிலேவ்" எனவும் பெயர்கள் சூட்டினார். தற்போது உள்ள ஆசிரமத்தில் இருந்து, இந்த இடம் 7.5 கிமீ.தூரத்தில் உள்ளது.

## ஆசிரமத்திற்கான நிலம், இந்தூர்



மதிப்பிற்குரிய மாஸ்டர், இந்தூர் மையத்தை, புதிய, பெரிய 30 ஏக்கர் செயல் திட்டத்துடன் ஆசிர்வதித்துள்ளார். புதிய ஆசிரமத்திற்கான நிலம், தற்பொழுது அமைந்துள்ள ஆசிரமத்திலிருந்து 12 கி.மீ தொலைவில் உள்ளது. நவம்பர் 14 அன்று, புதிய ஆசிரம நிலத்தில், ஒரு நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஏறத்தாழ 600 சகோதர சகோதரிகள் நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

## புதிய மையம் - பரலக்கிமுண்டி, ஒரிசா

நவம்பர் 2010 ல் ஒரிசா மண்டலம், கஜபதி மாவட்டத்தைச் சேர்ந்த பரலக்கிமுண்டியில், புதிய மையம் தொடங்கப்பட்டுள்ளது. பரலக்கிமுண்டி, இதற்கு முன்பாக இளவரசரின் நிலப்பகுதியாக இருந்தது. பரலக்கிமுண்டியை சுற்றிலும், தோராயமாக 5 கி.மீ சுற்றளவிற்கு உருவாக்கப்பட்டுள்ளது.

இரு பிரிவுகளாக, மொத்தம் 19 அப்யாசிகள் மையத்தில் சேர்ந்திருக்கிறார்கள். தற்பொழுது இங்கு பிரிபெக்ட்கள் இல்லாததால், அப்யாசிகளின் தேவைக்காக, பிற மையத்திலிருந்து வரவழைக்கப்படுகிறார்கள். இந்த பொறுப்புகளை ஒருங்கிணைக்கும் வகையில், சகோ. சந்தோஷ் சாஹூ பணி புரிந்து வருகிறார். (தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் - 099370 80707). இது ஒரிசா மண்டலத்தின் 20 வது மையமாகும்.

## 10ஆம் ஆண்டு நிறைவு விழா, ஹாசன் மையம்

ஹாசனில் SRCM மையம் துவங்கி 10 ஆண்டுகள் நிறைவடைவதால், அதனை நினைவு கூறும் வகையில், ஒரு முழு நாள் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அருகிலுள்ள சிக்மகளூர், திப்தூர், பெங்களூர் மற்றும் மைசூர் மையங்களின் அப்யாசிகளும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தார்கள்.

நிகழ்ச்சி காலை சத்சங்கத்துடன் துவங்கியது. அதனைத் தொடர்ந்து "அப்யாசியின் பங்கு", "பத்து நியமங்கள்", "சகஜ மார்க்க முறையும் அதன் எளிமையும்" மற்றும் "சகஜ மார்க்க முறையின் அடிப்படைகள்" ஆகிய தலைப்புகளில் அப்யாசிகள் பேசினார்கள். மதிய உணவிற்கு பின் கேள்வி-பதில் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இது கலந்து கொண்டவர்களிடத்தில், சாதனா பற்றி தங்களுக்கிருந்த சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கு பெரிதும் உதவியாக இருந்தது. குருவானவர் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைப் பற்றியும், தனது அப்யாசிகளுக்காக அவர் செய்யும் தியாகங்கள் பற்றியும் உரையாற்றியவர்கள் விளக்கமளித்தார்கள். மாலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

## இல்லக் கூட்டங்கள்

### தேனி மாவட்டம் - தமிழ் நாடு



அக்டோபர் 23, 2010 அன்று, போடிநாயகனூர், கம்பம் ஆகிய பகுதிகளில் இல்லக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. சகோ.ஆர்.சுந்தரம் மற்றும் சகோதரி சுபஸ்ரீ ஸ்ரீனிவாசன் நடத்திய இந்த இல்லக் கூட்டங்களில், தமிழ் நாடு தெற்கு மண்டல பொறுப்பாளர், சகோ. விச்வநாத ராவ் கலந்து கொண்டார். போடிநாயக்கனூரில், சில ஆண்டுகளாக பயிற்சியைத் தொடராத சில அப்யாசிகள், இனி பயிற்சியை சரியாக தொடரப்போவதாக உறுதியளித்தது, கூட்டத்தை இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

கம்பத்தில், மன்னார் குன்று அடிவாரத்தில் அமைந்துள்ள, ஓர் அப்யாசியின் வீட்டில், கிட்டத்தட்ட 40 மக்கள் குழுமியிருந்தார்கள். சகோ.சுந்தரம், வந்திருந்த அனைவருக்கும், மிஷனைப் பற்றி அறிமுகம் செய்தார்.

### ஹைதராபாத்

பல்வேறு சிறிய மையங்களில், மாதம் அல்லது வார அடிப்படையில், இல்லக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இந்த கூட்டங்கள், அப்யாசிகளாக இருப்பவர்களிடத்தும், மற்றும் இந்த பயிற்சி முறையில் ஆர்வமுள்ளவர்களிடத்தும், ஒரு ஈடுபாட்டினை ஏற்படுத்துகின்றன. ஏற்கனவே இருக்கும் அப்யாசிகளிடத்தில், சகஜ மார்க்கத்திலுள்ள மூன்று 'M' களைப் பற்றிய விழிப்புணர்வைத் தெரியப்படுத்தி, அதனை அவர்களிடத்தில் ஆழமாகப் பதியச் செய்து, மேலும் நாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்தையும் ஊக்குவிப்பதாக அமைந்தன.

ஆன்மீக நாட்டமுடைய அண்டை வீட்டினர் மற்றும் நண்பர்களை அழைத்து வந்து, சகஜ மார்க்க முறையை அறிமுகம் செய்தனர். இந்த நிகழ்ச்சிகள், கலந்து கொள்பவர்கள் வெளிப்படையாகவும், நட்பார்ந்த முறையிலும், கலந்துரையாடும் சந்திப்பாக அமைந்தது.

ஹைதராபாத் குறு மையமான மல்கஜ்கிரியில், கிட்டத்தட்ட 30 அப்யாசிகள், கடந்த சில வாரங்களாக, ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒன்றிணைந்து, சாதனா பற்றிய வெவ்வேறு அம்சங்களை கலந்துரையாடினர். ஒவ்வொரு அப்யாசியும், வெளிப்படையாகவும், பயிற்சியை ஆர்வத்துடன் செய்ய முயற்சி செய்பவர்களாகவும் இருக்கிறார்கள் என்பது அறியப்பட்டுள்ளது.

## குடும்ப ஒன்றிணைதல் கூட்டம் -ஒங்குல், ஒரிசா

அப்யாசிகளின் குடும்பத்திற்குள் நெருங்கிய உறவை வளர்க்கும் வகையில், ஒங்குல் மையத்தில், டிசம்பர் 9, 2010 அன்று மாலை, ஒரு நட்பார்ந்த ஒன்றிணைதல் கூட்டம் நடத்தப்பட்டது. இந்த கூட்டம், நட்பார்ந்த முறையில் இருந்தாலும், வாழ்க்கையில் ஆன்மீகத்தின் சாரம்சத்தைப் பற்றியதாகவே இருந்தது. கலந்து கொண்டவர்கள், ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற, தங்களது எண்ணங்கள், அனுபவங்கள் மற்றும் கருத்துகள் ஆகியவற்றை பகிர்ந்து கொண்டனர். மையம் வளர்ச்சியடைய தேவையான வழிமுறைகள், மற்றும் அப்யாசிகளை இதில் ஈடுபடுத்துவதற்கான வழிமுறைகள் பற்றிய உபயோகமுள்ள கருத்துகளை, இந்த நிகழ்ச்சியின் மூலம் மையம் பெற்றது. மையம் வளர்ச்சியடையவும், மற்றும் அதன் செயல்பாடுகளை திட்டமிடவும், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது, இவ்வாறான கூட்டம் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று அப்யாசிகள் முடிவு செய்தனர்.

## ஒருங்கிணைப்பாளர்களுக்கான கருத்தரங்கம், சூரத்



டிசம்பர் 12, 2010 அன்று, சூரத் மையம், ஒருங்கிணைப்பாளர்களுக்காக மண்டல அளவிலான ஒரு முழுநாள் கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்திருந்தது. இல்லக்கூட்டங்கள், வரவேற்புக்கூட்டங்கள், நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி, கட்டுரை எழுதும் நிகழ்ச்சி, துணை மைய மேம்பாடு மற்றும் இது போன்ற வேறுபட்ட செயல்பாடுகள் பற்றி கலந்துரையாடி, சந்தேகங்களை போக்கிக் கொள்வதே இக்கருத்தரங்கத்தின் நோக்கமாக இருந்தது. தென் மண்டலத்திலுள்ள பல்வேறு மையங்களிலிருந்து, ஏறக்குறைய 84 ஒருங்கிணைப்பாளர்கள், இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

சகோதரர் ஹிரேன் ஷா (மண்டலப் பொறுப்பாளர்) வரவேற்புரை ஆற்றினார். சகோதரர் சுரேஷ் ராஜகோபாலன், டாக்டர் சுரேந்திர அகர்வால், சகோதரி சௌம்யா ராஜகோபாலன், சகோதரி விபா ராத்தோட் மற்றும் சகோதரர் விலாஸ் போண்டே ஆகியோர், இந்நிகழ்ச்சியின் பேச்சாளர்களாக இருந்தனர்.

## கலந்துரையாடல் - மூடநம்பிக்கையும் ஆன்மீக வளர்ச்சியும், ஜெய்பூர்

2010 அக்டோபர் 31, அன்று, "மூட நம்பிக்கையும் ஆன்மீக வளர்ச்சியும்" என்ற தலைப்பில், ஜெய்ப்பூர் மைய அப்யாசிகளிடையே கலந்துரையாடல் நடைபெற்றது. அவர்களில் பலர், தங்களது கடந்தகால நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் விளைவாக ஏற்பட்ட சூழ்நிலைகளையும், மாஸ்டரின் வழிகாட்டுதல் மூலமாக, குழப்பங்களை எவ்வாறு அவர்களால் வெற்றிகொள்ள முடிந்தது என்பதனையும் தெரிவித்தனர். சில புதிய அப்யாசிகள், இது எவ்வாறு சாத்தியம் என வியப்புற்றனர். அதற்கு அனுபவம் மிக்க அப்யாசிகள், தவறாத பயிற்சியுடன் கூடிய மாஸ்டர் மீதான நம்பிக்கை மட்டுமே, ஒருவரின் இதயத்தை அவருக்காக திறக்க உதவும் என விளக்கினர். இதைத் தொடர்ந்து, மிஷனின் இலக்கியம், குறிப்பாக "ஒளி உலகிலிருந்து மென் குரல்கள்" பற்றிய ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடல்களின் போது, அனைவராலும் மாஸ்டரின் அன்பு மற்றும் வழிகாட்டுதல் உணரப்பட்டது.

## ஆன்மீக சிற்றோய்வு (spiritual retreat), அகமதாபாத்

அகமதாபாத் மையத்தில், தீபாவளி விடுமுறை நாட்களையொட்டி, ஆறு நாள் ஆன்மீக சிற்றோய்வு நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குஜராத்தின் பல்வேறு மையங்களிலிருந்து வந்திருந்த சுமார் 125 அப்யாசிகள், இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு, யோகாசிரமத்தில் தங்கினர். ஒவ்வொரு நாளும் இரண்டு சத்சங்கங்கள் நடத்தப்பட்டன. மேலும், யோகா வகுப்புகள், டிவிடிக்களைப் போட்டுக் காண்பித்தல், தனி தியானங்கள் மற்றும் பொன்னான மௌன நேரம் போன்ற வேறுபட்ட செயல்பாடுகள், தக்க கால அட்டவணையுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பங்கேற்பாளர்கள் முனைப்புடன் தன்னார்வப் பணிகளை மேற்கொண்டனர். பயிற்சி பற்றிய தெளிவடைதலுக்காக, சகோதரர் சுரேஷ் ராஜகோபாலனால் ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சி, அதைத் தொடர்ந்து கேள்வி பதில் நேரம், ஆகியன நடத்தப்பட்டன. சகோதரர் தர்மேஷ் மற்றும் சகோதரி கஸ்தூரி ஆகியோர் நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி பற்றிய ஒரு பகுதியை வழங்கினர். நிகழ்ச்சியின்போது சில அறிமுக தியானங்களும் கொடுக்கப்பட்டன.

## வெளியீட்டுக் குழுவிற்கான பயிலரங்கம், தெற்கு கர்நாடகா



மைசூர் ஆசிரமத்தில், டிசம்பர் 18, 19 ஆகிய தேதிகளில், இரண்டு நாள் உறைவிட நிகழ்ச்சியாக, வெளியீட்டுப் பயிலரங்கம் ஒன்று நடத்தப்பட்டது. இது, வெளியீடுகள் எல்லா அப்யாசிகளுக்கும் கிடைக்கும் விதத்தில், அதன் சென்றடையும் வரம்பை, திறம்பட்ட மற்றும் பயனுள்ள வகையில் விரிவாக்கும்பொருட்டு, தென் கர்நாடகத்திலுள்ள மையங்களின், தன்னார்வலர்களை பயிற்றுவிப்பதற்காக நடத்தப்பட்டது. இதில், 15 மையங்களிலிருந்து வந்திருந்த, சுமார் 54 அப்யாசிகள் கலந்துகொண்டனர். பங்கேற்பாளர்களுக்கு, விற்பனை செய்தல், கணக்கு வைத்தல், இருப்புக்கணக்கு எடுத்தல், தவணைக் கட்டணங்களை வசூலித்தல் மற்றும் சமர்ப்பித்தல், மற்றும் மிஷன் வெளியீடுகளை விநியோகித்தல் ஆகிய பல்வேறு செயல்முறைகளை அறிமுகப்படுத்தி, அவற்றைப் புரிந்துகொள்ள வைப்பதே, இந்த பயிலரங்கத்தின் நோக்கமாக இருந்தது.

அவரவர் மையங்களிலுள்ள வெளியீட்டுத் துறையை சீராக செயல்பட வைப்பதற்காக, அப்யாசிகளை ஊக்குவிக்கவும், அவர்களுக்கு உதவவும், ஒரு முறையான பின் தொடர்தல் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

## வதோதரா, குஜராத்



அக்டோபர் 24 ம் தேதி, வதோதராவில், ஒரு வரவேற்புக்கூட்டம் நடத்தப்பட்டது. தன்னார்வ அப்யாசிகளின் துணைகொண்டு ஏறக்குறைய 1500 அழைப்பிதழ்கள், ONGC காலனியிலும், அதன் சுற்று வட்டாரத்திலும் கொடுக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சி, ஞாயிறு காலை, ONGC அவைக்கூடத்தில், அப்யாசிகளுக்கான 7:30 மணி சத்சங்கத்துடன் துவங்கியது. அப்யாசிகளால் அழைக்கப்பட்டிருந்த விருந்தினர்கள், காலை 10 மணி முதல் வரத் தொடங்கினர். முதல் பகுதி, ‘ஆன்மீகம் எதற்கு?’ என்ற தலைப்பிலான ஒரு விளக்கவுரை. இது, சமன்பட்ட வாழ்க்கையின் அவசியத்தை வலியுறுத்தியது. சகோதரர் கமலேஷ் படேல், சகஜ மார்க்கத்தைப் பற்றி ஒரு மேலோட்டமான விளக்கத்தை அளித்தார். இந்த ஆன்மீகப் பயணத்தில் பங்கெடுத்துக் கொள்ளும்படி, அனைவருக்கும் அழைப்பு விடுத்தார். அவையினர் பேச்சாளர்களின் உரைகளைக் கூர்ந்து கவனித்தனர். தேநீர் இடைவேளையின் போது, பயிற்சியைத் துவக்க விரும்பிய ஆர்வமிக்க விருந்தினர்கள் கேட்ட கேள்விகளுக்கு, ப்ரிசெப்டர்கள் பதிலளித்தனர். அனைத்து விருந்தினர்களுக்கும், நமது ஆசிரம வரைபடங்களும், ப்ரிசெப்டர்களின் தொடர்பு விவரங்கள் அடங்கிய பட்டியலும் அளிக்கப்பட்டன. வந்திருந்த 170 விருந்தினர்களில் 80 பேர் சகஜ மார்க்கத்தில் சேர விருப்பம் தெரிவித்தனர். பலர் அறிமுக தியானங்களும் எடுத்துக் கொண்டனர்.

# முழு நாள் நிகழ்ச்சிகள்

## சின்னவல்லிகுளம் ஆசிரமம், விருதுநகர், தமிழ்நாடு

அக்டோபர் 31 ம் தேதியன்று, சின்னவல்லிகுளம், விருதுநகர் ஆசிரமத்தில், முழு நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் விருதுநகர், கோவில்பட்டி, கரியாபட்டி என்ற இடங்களிலிருந்து சுமார் 44 அப்யாசிகள் கலந்து கொண்டனர். காலை சத்சங்கத்திற்குப்பின், 'நற்பண்புகளை வளர்த்துக்கொள்ளுதல்', 'நீதிநெறியும் நல்லொழுக்கமும்' என்ற தலைப்புக்களில், மாஸ்டர் அளித்த உரைகள் ஒலிபரப்பப்பட்டன. அதன்பின் நடைபெற்ற வினா விடை நிகழ்ச்சியில் அப்யாசிகள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

## மதுரை ஆசிரமம், தமிழ்நாடு



அக்டோபர் 31 ம் தேதியன்று, மதுரையில் நடந்த நிகழ்ச்சியில், மதுரை, மற்றும் சுற்றுப்புற மையங்களிலிருந்து, சுமார் 500 அப்யாசிகள் கலந்துகொண்டனர். சகோ.பி.பழனியப்பன் முகவுரை வழங்கி பேசும்பொழுது, எல்லா அப்யாசிகளும், மாஸ்டரின் உரைகளை கேட்டு, அவற்றை மனதில் உள்வாங்கும்படியும், இந்த ஆன்மீகச்சூழலை அனுபவிக்குமாறும் வேண்டிக்கொண்டார்.

சகோதரி சாந்தகுமாரி, 'சகஜ மார்க்கத்தின் அடிப்படை தத்துவங்கள்' பற்றியும், சகோதரி எஸ்.பழனியம்மாள், 'பயிற்சி' பற்றியும், சகோதரி எ.ஜி.தங்கம், 'பத்து நியமங்களும் வாழ்வில் அவற்றின் பங்கும்' பற்றியும், சகோதரி லதா சிவராமன், 'ஆன்மீக மாற்றங்கள்' பற்றியும் உரையாற்றினர். சகோ.பி.பழனியப்பன், அக்டோபர் 9 ம் தேதி, மணப்பாக்கத்தில் மாஸ்டர் அளித்த, 'நல்லொழுக்கத்தின் மேன்மை' என்ற உரையை விளக்கிப் பேசினார். மாலை சத்சங்கத்துடன், அப்யாசிகள் தங்கள் எண்ணங்களை ஒருங்கிணைக்கும் வண்ணம் விழா நிறைவுற்றது.

நவம்பர் 14 ம் தேதி, மண்டலப்பொறுப்பாளர் சகோ.டி.வி. விசுவநாத ராவ், பயிலகத் திறப்புவிழாவை முன்னிட்டு, மதுரை ஆசிரமத்திற்கு வருகை புரிந்தார். ஞாயிறு காலை சத்சங்கத்திற்குப்பின் அவர், 'நல்லொழுக்கத்தை வளர்த்துக்கொள்வதை' பற்றி உரையாற்றும் பொழுது, மாஸ்டரின் பிராணாஹுதியை உள்வாங்கிக்கொண்டு, ஒரு அப்யாசி ஆன்மீகவாதியாக எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்தினார். பயிலகத்தின் கூரை, உலகத்தலைமைமையம் மூலமாக அனுப்பப்பட்டிருந்த, G.I. தகடுகளால் வேயப்பட்டிருந்தது. சிறுவர் தினவிழாவையொட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதில் 70 சிறுவர்களும், அவர்களின் பெற்றோர்களும் மகிழ்ச்சியுடனும், பொறுப்புடனும் கலந்து கொண்டனர்.

## ஹர்தோய், உத்திரப்பிரதேசம்

டிசம்பர் 5 ம் தேதியன்று, ஹர்தோய் மையத்தில், குழு விவாதம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சகோ.சஞ்ஜய் தொகுத்து வழங்கிய இதில், பல அப்யாசிகள் கலந்து கொண்டனர். 'அப்யாசியின் ஆன்மீக பரிணாம வளர்ச்சி' என்ற தலைப்பில், அப்யாசிகள் சிறு குழுக்களாகப்பிரிந்து விவாதித்து, குறிப்பெடுத்துக்கொண்டனர். பின் ஒவ்வொரு குழுவும், தன் விவாதத்தைப் பற்றிய சாரம்சத்தையும், முடிவையும் எடுத்துரைத்தது. சகோ.சஞ்ஜய் தன் முடிவுரையில், மனதைத்தொடும் வண்ணம் அமைந்த இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சி, சகோதரத்துவத்துடனும், மாஸ்டரின்பால் நன்றி கொள்ளும் விதமாகவும் அமைந்தது.

## ராமநாதபுரம்

நவம்பர் 21 ம் தேதி, ராமநாதபுரத்தில் முழுநாள் நிகழ்ச்சி கொண்டாடப்பட்டது. இதில் ராமநாதபுரம், பரமக்குடி, மானாமதுரை, சிவகங்கை முதலிய மையங்களிலிருந்து, பிரசெப்டர்கள் உள்ளடங்கிய 44 அப்யாசிகள் கலந்து கொண்டனர். 'ஒரு பெருமை மிகு சகஜ மார்க்க அப்யாசியாக ஆக நாம் என்ன செய்ய வேண்டும்' என்ற தலைப்பில் விவாதம் நடைபெற்றது. அதன்பின், 'ஆன்மீகத்தின் முக்கியத்துவம்' பற்றிய ஒலி/ஒளித்தகடு திரையிடப்பட்டது.

## சிவகங்கை

நவம்பர் 28 ம் தேதியன்று, முழுநாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில், சிவகங்கை, மானாமதுரை, பரமக்குடி, ராமநாதபுரம் மற்றும் மதுரை மையங்களிலிருந்து சுமார் 90 அப்யாசிகள் கலந்து கொண்டனர். 'சகஜ மார்க்கத்தைபற்றிய சரியான அறிவு இல்லாமல் அதை கடைப்பிடிப்பது கடினம்' என்ற மாஸ்டரின் உரையை பின்பற்றி, தியானம் என்பது என்ன? தியானத்தின் முக்கியத்துவம், சகஜ மார்க்க முறையில் தியானம், தியானத்தின் மேன்மைகள் போன்ற தலைப்புக்களில், கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.



சிவகங்கை



விருதுநகர்



ஹர்தோய்


நிஜாமாபாத்


நாட்ராம்பள்ளி

## திருப்பூரில் முழு நாள் நிகழ்ச்சி

டிசம்பர் 12ஆம் தேதி, திருப்பூர் வைரவிழா பூங்காவில், ஒரு முழுநாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஞாயிறு சத்சங்கத்தைத் தொடர்ந்து, மண்டலப் பொறுப்பாளர், சகோதரர் டி.வி.விஸ்வநாதராவ், அறிமுகவுரை நிகழ்த்தினார். அதில் அவர், ஆசிய கருத்தரங்கின் போது மாஸ்டர் ஆற்றிய "செய் அல்லது செத்துமடி" என்னும் உரைகளிலிருந்து மேற்கோள் காட்டினார்.

முழு நாள் நிகழ்ச்சியின் தலைப்பு, "நல்லொழுக்க மேம்பாடு" என்பதாகும். சகோதரர் ஆ.ர்.சுந்தரம் தலைப்பிற்கு அறிமுகவுரை வழங்கினார். நல்லொழுக்க மேம்பாட்டின் அடிப்படைகளான பல்வேறு கருத்துக்கள், பேச்சாளர்களால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இந்த முழு நாள் நிகழ்ச்சி, தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததென பங்கேற்றவர்கள் உணர்ந்தனர்.

## நிஜாமாபாத், பன்ஸ்வாடாவில் மாணவர்களிடையே உரை

டிசம்பர் 11 அன்று, நிஜாமாபாத் மாவட்டம், பன்ஸ்வாடாவிலுள்ள ஸ்ரீகிருஷ்ணவேணி டாலன்ட் பள்ளியில், மாணவர்களுக்கு "நன்னெறிகள் மற்றும் ஆன்மீகம்" என்ற தலைப்பில், உரை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. குழந்தைகள் விளையாடிய, எளிமையான விளையாட்டுகள் மூலம், குழு உணர்வு பற்றிய கருத்து உணர்த்தப்பட்டது. சுமார் 16 ஆசிரியர்கள், மற்றும் ஒன்றாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையிலான 400 க்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் பங்கேற்றனர்.

பன்ஸ்வாடாவிலுள்ள, சாய் கீர்த்தி ஜூனியர் கல்லூரியினரும், இளநிலைப் பட்டதாரி மாணவர்களுக்கும் அதே மாதிரியான நிகழ்ச்சியை நடத்தும்படி, நமது மிஷனை அணுகினர். 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள், மற்றும் 20 விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர். சமநிலை வாழ்வின் அவசியம், மனித நெறிகள் மற்றும் ஆன்மீகம் பற்றி, மாணவர்களுக்கு, எளிமையான செயல்முறைகள் மூலம் அங்கு விளக்கப்பட்டது.

## சகஜ மார்க்க படை வீரர்கள், தென் கர்நாடகா

இரண்டு நாள் தங்கி பங்கேற்கும், "சகஜ மார்க்க படை வீரர்கள்" நிகழ்ச்சி தமிழ் நாட்டிலுள்ள நாட்ராம்பள்ளி ஆசிரமத்தில், தென் கர்நாடகாவிலிருந்து வந்திருந்த 47 அப்யாசிகளுக்கு, நவம்பர் 13 மற்றும் 14 ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு, ஏப்ரல் 2004ல், பெங்களூரில் மாஸ்டர் ஆற்றிய "ஆன்மீகத்தின் படை வீரர்கள்" என்னும் பேச்சு, ஊக்கமாக அமைந்தது. அதில் மாஸ்டர், "ஆதலால் தயவு செய்து அதற்கு தயாராக இருங்கள்; அது மிகவும் கடினமாக இருக்கப் போகிறது, ஆனால் நமக்கு தேவை ஆன்மீகத்தின் படை வீரர்களே..........நாம் கொல்லப்போவது நமது சொந்த சம்ஸ்காரங்களையே, நமது சொந்த தீய பழக்கங்களையே, நமது சொந்த எதிர்மறையான எண்ணங்களையே. ஆதலால், நாம் உள்ளிருந்து தெய்வத்தன்மை உடையவர்களாக வெளிவருகிறோம்" என்று கூறியிருந்தார்.

இந்த நிகழ்ச்சியின் நோக்கம், தென் கர்நாடகாவில் உற்சாகத்தை உருவாக்கி, மற்றும் சக்தி வாய்ந்த தன்னார்வத் தொண்டர்கள் குழுவை பலப்படுத்தி, அதன் மூலம் அவர்களை சகஜ மார்க்கப் படை வீரர்களாக செயலாற்றச் செய்வதாகும்.

எப்படி சகஜ மார்க்க வழி வாழ்க்கையை வாழ்வது, ஒரு முன்மாதிரியாக இருப்பது, பலனளிக்க கூடிய மற்றும் திறன்மிக்க தன்னார்வத் தொண்டாற்றும் முறைகள், ஒரு அப்யாசியின் பண்புகள், சரியாக மற்றும் பலனளிக்கக் கூடிய வகையில் சகஜ மார்க்கப் பயிற்சி செய்தல் ஆகிய 5 கலந்துரையாடல் பகுதிகள் இந்த நிகழ்ச்சியில் இடம்பெற்றிருந்தன.

ஒரு மிகச்சிறந்த அப்யாசியின் பண்புகளை பட்டியலிடும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட அப்யாசிகள், சகஜ மார்க்கம் ஒரு எளிமையான முறையென்றாலும் முழுமையான மனிதத்துவத்தை அடைவது ஒரு கடினமான செயல் மற்றும் அதற்கு அப்யாசிகளிடமிருந்து அதிகப்படியான அர்ப்பணிப்பு தேவை என்பதை உணர்ந்தனர். மேலும் அவர்கள், இந்த நிகழ்ச்சி, சாதனா பற்றிய தங்களின் மனப்பான்மையை மாற்றுமென்றும், அவர்கள் பயிற்சியை முறையாக செய்ய ஆரம்பிக்கவேண்டும் என்றும் உணர்ந்தனர்.

## அப்யாசிகளுக்கான பயிற்சி முகாம் - மங்களூர்

அக்டோபர் 17 அன்று, சகோதரர் மோகன்தாஸ், மங்களூரைச் சேர்ந்த 32 அப்யாசிகளுக்கு, ஒரு பயிற்சி நிகழ்ச்சியை நடத்தினார். கலந்துரையாடலுக்கு, "எனது மாஸ்டர், எனது பயிற்சிமுறை மற்றும் எனது மிஷன்" என்ற தலைப்பு எடுத்துக்கொள்ளப்பட்டது. "வாழ்க்கையில் குருவின் முக்கியத்துவம்" என்ற டிவிடி ஒளிபரப்பப்பட்டது. மேலும் அவர், "சகஜ மார்க்க மாஸ்டர்கள் மற்றும் மனிதகுல ஆன்மீக எழுச்சிக்கு அவர்களின் பங்கு" என்பது பற்றிய விளக்கவுரையும், அதனைத் தொடர்ந்து, "எனது பயிற்சிமுறை" என்பது பற்றியும் விளக்கினார். நமது பயிற்சியின் முக்கிய அம்சங்களைப்பற்றிக் கூறினார். அவர் தன்னார்வத் தொண்டின் முக்கியத்துவத்தை அழுத்தம்படக் கூறினார். "மாஸ்டர் மற்றும் சீடன்" என்ற டிவிடி இடம்பெற்றதுடன், அதனைத் தொடர்ந்து பல்வேறு தலைப்புகளில் குழு கலந்துரையாடல்கள் நடைபெற்றன. சகோதரர் மோகன்தாஸ், நல்லொழுக்க மேம்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் அப்யாசிகள் தங்கள் வெளிப்புற நடவடிக்கைகளில் மாற்றம் கொண்டு வருவது அவரவர்களின் பொறுப்பு என்பது பற்றியும் கூறினார்.

இந்த நிகழ்ச்சியின் நிறைவுரையின்போது, சகோதரர் கே. ராதாகிருஷ்ணா, இந்த பயிற்சி நிகழ்ச்சி, நம்முடைய மூன்று'M'களைப் பற்றி தெளிவாகப் புரிந்து கொள்ள உதவியது என்றும், மேலும் நமது பயிற்சியை விடாமுயற்சியுடன் செய்து, மாஸ்டர் நம்மிடமிருந்து எதிர்பார்க்கும், மனித வாழ்க்கையின் குறிக்கோளை மிக விரைவில் அடைய வேண்டுமென்றும் கூறினார்.



## கரீம்நகர் ஆசிரமம்








ஆந்திரப் பிரதேசத்திலுள்ள கரீம்நகர், மாவட்டத் தலைமையிடமாகவும், ஸ்ரீராம் சந்த்ர மிஷனின் பழமையான ஆசிரமங்களில் ஒன்றாகவும் இருந்து வருகிறது. சுறுசுறுப்பான இந்த நகரமானது, இரு ஆசிரமங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. பழைய ஆசிரமமான மண்கம்மா தொடா ஆசிரமம் நகரத்தின் உள்ளேயே இருக்கிறது. சமீபத்திய ஆசிரமமானது, நகரத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில், ஹைதராபாத் தேசிய நெடுஞ்சாலையில் (தே.நெ.7) அமையப்பெற்றுள்ளது. சகஜ மார்க்கம் 1975 ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து, கரீம் நகரில் ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. தொடக்கத்தில் சத்சங்கமானது, சகோ.என்.எச்.ராஜு அவர்களது வீட்டில் நடைபெற்றது. 1979 ஜுலை 14ந் தேதி அன்று, பூஜ்ய பாபூஜி மகராஜ் அவர்கள், நிலையான தியான மையம் அமைக்க அனுமதி அளித்தார்.



### மண்கம்மா தொடா ஆசிரமம்

1980 ம் ஆண்டு, 1000 சதுர அடி நிலம் வாங்கப்பட்டு, 1987 ம் ஆண்டு ஜனவரியில், ஆசிரமக்கட்டிடம் அமைக்க, மாஸ்டர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டது. இது 1990 ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.

மாஸ்டர் அவர்களால், ஆசிரமம் அக்டோபர் 9, 1991 அன்று திறந்து வைக்கப்பட்டது. இது, ஆர்.சி.சி கட்டிட முறையில் 9 குண்டா நிலப்பகுதியில் கட்டி முடிக்கப்பட்டது. அங்கு, ஒரு தியானக்கூடம்(50 ச.அடி* 70ச.அடி), ஒரு சமையல் கூடம், வரிசையாக கட்டப்பட்ட கழிவறைகள், 500 புத்தகங்கள், ஒலி/ஒளி குறுந்தகடுகள்/ஒலி,ஒளிப் பேழைகள் மேலும் பலவற்றை உள்ளடக்கிய நூலகம், மற்றும் மாஸ்டருக்காக, சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட அறை, ஆகியவை இருக்கின்றன.



### பார்த்தசாரதி நகர் ஆசிரமம்

நகரத்தின் வெளிப்புறத்தில் இருக்கும் இந்த ஆசிரமத்தை, மாஸ்டர், ஏப்ரல் 5, 2004 அன்று திறந்து வைத்தார். மொத்தமாக 16.5 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு, அதில் 4.5 ஏக்கர் நிலம், ஆசிரமத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டது.

இந்த ஆசிரமமானது, 300 அப்யாசிகள் அமரக்கூடிய அளவில் ஒரு தியானக்கூடம்(50/60)ச.அ), ஒரு சமையல் கூடம், சாப்பிடும் இடம், நூலகம் மற்றும் வரிசையாக கட்டப்பட்ட கழிவறைகளை பெற்றிருக்கிறது. இங்கே சிறந்த முறையில் மாஸ்டர் குடிலுடன், விருந்தினர் அறையும் இணைந்து உள்ளது.



மாஸ்டர் தனது திறப்பு விழா உரையில், "நமது வீடு வைகுண்டமாக (சொர்க்கம்) இருக்க விருப்பப்படுகிறோம். இது போன்ற வழிகளில், நீங்கள் இதயத்தை மேம்படுத்திக் கொண்டால், அது நடக்கும். நீங்கள் இதயத்தை மேம்படுத்திக் கொண்டால், நீங்கள் வைகுண்டத்திற்கு செல்வதற்கு பதிலாக, வைகுண்டமே உங்கள் வீடு தேடி வரும். ஆனால், அது உங்கள் இதயத்தைப் பொறுத்தது. அவ்வாறு உங்கள் இதயத்தை மேம்படுத்த, நீங்கள் இது போன்ற இடங்களுக்கு வர வேண்டும்," என்று கூறினார்.

மாஸ்டர், கரீம்நகர் ஆசிரமத்திற்கு பல முறை வருகை புரிந்திருக்கிறார். மார்ச் 1987, பிப்ரவரி 1989, அக்டோபர் 1991, டிசம்பர் 1994, அக்டோபர் 1997, பிப்ரவரி 2002 மற்றும் சமீபத்தில், ஏப்ரல் 2004 ல் வந்து சென்றிருக்கிறார். அவர், ஒரு முறை கரீம்நகருக்கு வந்திருந்தபொழுது, கரீம்நகர் அவருக்கு கரீப்நகராக இருக்கிறது என கூறினார். அதற்கு அவரது இதயத்திற்கு அருகே என பொருள். அவரது வருகையின் பொழுதெல்லாம், பலமுறை உரை நிகழ்த்தியுள்ளார். அவர் அவ்வப்போது தெலுங்கில் பேசுவதை கேட்க, அப்யாசிகள் ஆர்வமுடன் காத்திருந்தனர்.

இங்கு, இரண்டு முழுநாள் நிகழ்ச்சியானது நடத்தப்படுகிறது. ஒன்று, பார்த்தசாரதி நகரில், மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமையிலும், மற்றொன்று, மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக் கிழமையன்று, மண்கம்மா தொடா ஆசிரமத்திலும் நடைபெற்று வருகிறது. இந்த மாதந்திர கூட்டங்களில், 250 அப்யாசிகள் மற்றும் 70 குழந்தைகள், தொடர்ச்சியாக கலந்து கொள்கின்றனர். "இங்கு வந்து தியானம் செய்வதற்கான தேவையை புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். அப்பொழுதுதான் இதயத்தை மேம்படுத்தி, அதற்காக சுத்திகரிப்பு செய்து, அதிலிருக்கக் கூடிய கடினத்தன்மைகளை நீக்கி, அந்த இடத்தை என் மாஸ்டர் வந்து நிரந்தரமாக தங்குவதற்கேற்ற இடமாக உருவாக்க முடியும் " என்று ஒரு முறை மாஸ்டர் சொன்னது போல, இந்த ஆசிரமத்தின் அனைத்து செயல்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.



© 2011 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. “Shri Ram Chandra Mission", "Sahaj Marg", “SRCM”, “Constant Remembrance” and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.